1982 ஏப்ரல் 3]

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்லும்பொழுது சற்றுக் காலதாமதம் வேலையில் ஏற்படுவதற்கு இயற்கை காரணம் என்று சொல்கிறார்கள். அந்த வேலை அரசாங்கத்தால் நடைபெறுகிறதா அல்லது பிரைவேட் காண்ட்ராக்ட் மூலம் நடைபெறுகிறதா? பிரைவேட் கான்ட்ராக்ட்காரர்கள், வேண்டுமென்றே டிலே செய்து ரிவைஸ்ட் எஸ்டிமேட் போட்டுக் கூடுதலாகப் பணம் பெறலாம் என்பதற்காகக் காலதாமதம் செய்வதாகச் சொல்கிறார்கள். அது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவரவர்களே, அரசு நிதி ஒதுக்கீடு செய்து அந்த நிதியைச் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்குத் தந்து, அந்தக் கட்டுமானப் பணிகளைச் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திடம் ஒப்படைத்திருக்கிறது. சுற்றுலா வளர்ச்சிக் கழகம் முறையாக ஒப்பந்தக்காரர்களிடம் விட்டிருக்கிறது. ஆனால் இருக்கின்ற கஷ்டம், அங்கே உள்ளது உப்புத் தண்ணீர். நல்ல தண்ணீரைக் கொண்டு போக வேண்டும். 3, 4 மைல் தூரத்திலிருந்து நல்ல தண்ணீரைக் கொண்டு வர வேண்டியிருக்கிறது. மின்சாரம் கொண்டு வர வேண்டியிருக்கிறது. அப்படிப்பட்ட முயற்சிகளில் பல துறைகளும் இணைந்திருப்பதால் அவர்களுடைய உதவியைப் பெறுவதில் இடையூறும், காலதாமதமும் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, ஒப்பந்தக்காரர்கள் வேண்டுமென்றே எந்தக் காரணத்தாலும் தாமதம் செய்யவில்லை.

குமரி மாவட்டத்திலுள்ள கண்ணன்னூர் பாலம்.

* வினா எண். 685—திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் வியல்லூர் கிராமத்தில் சாமியார் மடம்—தடிக்காரகோணம் சாலையில் 3 கி.மீட்டருக்கு பின்னால் இருக்கும் கண்ணன்னூர் பாலம் மிகவும் ஆபத்தான நிலையில் இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அவ்விடத்தில் புதுப்பாலம் கட்டுவதற்கு ஏதேனும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) மற்றும் (ஆ) சாமியார் மடம்—தடிக்காரன்கோணம் சாலையின் சரியான பெயர் மேக்கோடு—இலந்தையம்பலம் சாலை. இச்சாலையில் கி.மீ 1/4—இல் உள்ள பாலத்தை ரூ. 5.00 இலட்சம் செலவில் திரும்பக் கட்ட ஆணை பிறப்பிக்கப்பட்டு இப்பொழுது வேலை தொடங்கப்பட்டிருக்கின்றது.

TRUTH ALONE TRIUMPHS

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு தலைவரவர்களே, இலந்தையம்பலம் பக்கத்திலே உள்ள கண்ணன்னூர் என்ற இடத்திலிருக்கும் பாலத்தைக் கட்ட அனுமதி வழங்கப்பட்டதற்காக அமைச்சரவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நிதி ஆண்டிலேயே அது செய்து முடிக்கப்படுமா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, ஒப்பந்தமெல்லாம் 10-2-82-லே முடிந்து வேலைகள் தொடங்கப்பட்டிருக்கின்றன.

திரு. டி. மணி: பேரவைத் தலைவரவர்களே, இந்தப் பாலம் கட்டுவது சம்பந்தமாக மாண்புமிகு அமைச்சரவர்கள் அதற்குத் தேவையான பணம் ஒதுக்கப்பட்டிருக்கின்றது என்று தெரிவித்தார்கள். அதற்காக மிக்க நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் அதே நேரத்தில் 5 இலட்சம் ரூபாய் போதுமா என்ற கேள்விக் குறி எழுகிறது. காரணம், குறுகலான பாலமாக இருந்தாலும் போக்குவரத்து வண்டிகள் போகும்பொழுது இருமருங்கிலும் உராய்ந்து கொண்டு போகும் காட்சியைப் பார்க்கிறோம். 5 இலட்சம் ரூபாய் மதிப்பீடு என்றால் அது 22 அடி அல்லது 30 அடி அகலமாக இந்தப் பாலம் இருக்குமா? இதை அந்தத் தொகையில் செய்ய முடியுமா? அதேபோன்று நீண்ட நெடுங்காலத்திற்கு முன், ஏற்கனவே மாண்புமிகு அமைச்சரவர்கள் சென்று பார்த்து வந்த பன்னிப்பாலம், இன்னொரு பாலம் ஆகியவை இருக்கின்றன. ஆகவே, இதை அகலப்படுத்தி முறையாகச் செய்து முடிக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, குறுகிய பாலமாக இருந்த காரணத்தால்தான் ஏற்கனவே இருந்த பாலம் மூன்று மீட்டர் அகலமுள்ளது. பெரிய பாலமாக அமைக்க வேண்டுமென்று 5 இலட்சம் ரூபாயில் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. அதுபோதும் என்று தான் பொறியாளர்கள் கூறியிருக்கிறார்கள். அந்தத் தகவலின் அடிப்படையில் வேலை தொடங்கப்பட்டு நடந்து கொண்டிருக்கிறது. இன்னொரு பாலம் நான் நேரிலே பார்த்த பாலம், அதை அடுத்த ஆண்டிலே எடுத்துக் கொள்ளலாம்.

நகரங்களில் சுவரொட்டிகள் ஒட்ட குறிப்பிட்ட இடங்களை ஒதுக்கும் திட்டம்.

* வினா எண். 686—திரு. குமரி அனந்தன்; திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நகரங்களைத் தூய்மையாக வைத்திருக்க சுவரொட்டிகள் ஒட்டுவதற்கென குறிப்பிட்ட இடங்கள் தேர்வு செய்யப்படுமா?